## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## OS.No.37/2022

PW1–பார்வதி நாள்.08.07.2026

**1, 3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

எனக்கு எழுத, படிக்க தெரியாது. வழக்கு தாக்கல் செய்ய விவரம் சொன்னது என்கணவர் கோவிந்தராஜன் தான். எந்த சொத்திற்கு, என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரத்தை எனது வழக்கறிஞர் கேட்டு தெரிந்துகொண்டேன். 1, 3, 4 பிரதிவாதிகள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் கூடுதல் எதிர்வழக்குரை விவரங்கள் எனது வழக்கறிஞர் கேட்டு தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். எனது தாத்தா பெயர் முத்துஉடையார். முத்துஉடையாருக்கு கோவிந்தசாமி மற்றும் பிச்சைபிள்ளை மகன்கள் ஆவார். எனது தாத்தா இறந்தபிறகு கோவிந்தசாமி மற்றும் எனது தகப்பனார் பிச்சைபிள்ளை வெகுநாட்களுக்கு முன்னரே வாய்மொழியாக எங்களது குடும்ப சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினையில் இந்த வழக்கின் தாவா சொத்தான 1, 3, 4, 6, 8, 9, 11 மற்றும் 13 அயிட்ட சொத்துக்கள் மற்றும்சில சொத்துக்கள் எனதுஅப்பா பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள அவரது தனிபட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து மற்றும் 12வது அயிட்ட சொத்து மற்றும் இன்னும் சில சொத்துக்கள் கோவிந்தசாமிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பிறப்பதற்கு முன்பே 18.10.1965ல் எனது தகப்பனார் ஒரு பதிவுசெய்யப்பட்ட கிரய ஆவணத்தின் மூலம் தாவா 7, 10 அயிட்ட சொத்துக்கள் மற்றும் மேலமாத்தூர் கிராம சர்வே எண்.31/3ல் 33 செண்ட் கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரய சொத்தை கிரயம் வாங்குவதற்கு எனது அப்பாவின் தனிப்பட்ட வருமானம் மற்றும் எனது தாயாரின் சேமிப்பு பணத்தை கொண்டு வாங்கப்பட்டது என்றால் சரிதான். 16.03.1983ல் அவரின் தனிப்பட்ட வருமானம் மற்றும் எனதுதாயாரின் சேமிப்பு பணத்தை கொண்டு இந்த வழக்கு சொத்து 2, 5 அயிட்ட

சொத்துக்கள் ஒரு பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் மூலம் கிரயம் பெறப்பட்ட அவரது தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். 2, 5, 7, 10 கிரய பொறுத்து வாங்கிய சொத்துகள் அனைத்தும் பூர்விக சொத்தோடு சேர்ந்து அனுபவம் செய்யமால் அவரது தனிப்பட்ட சொத்தாக வைத்து தனியாக அனுபவம் செய்துவந்தார் என்றால் சரிதான். பின்னிட்டு எனது அப்பா உயிரோடு இருக்கும்போது எனக்கும், எனது சகோதரர் கந்தசாமி ஆகியோருக்கு இடையே வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றும், மேற்படி பாகப்பிரிவினையில் தாவா 1 முதல் 11 மற்றும் 13 சொத்துக்கள் அசையா சொத்துக்கள் 4ம் பிரதிவாதி கந்தசாமிக்கும், அசையும் சொத்துக்களான நகைகள் எனது பாகத்திற்கும் ஒதுக்கி கொண்டோம் என்றால் சரியல்ல. நான் நகைகளை பெற்றுக்கொண்டேன் என்றும், அதனால் மேற்படி சொத்துக்களில் உள்ள உரிமைகளை ஏற்கனவே விட்டுகொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி பாகத்தை ஊர்ஜிதப்படுத்தியும் அதன்படி 4ம் பிரதிவாதியும் தனிப்பட்ட அனுபவத்தை ஊர்ஜிதப்படுத்தியும், தாவா 1 முதல் 11 மற்றும் 13 சொத்துக்களுக்கு 4ம் பிரதிவாதி பெயரில் வருவாய்துறை ஆவணம் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா 1 முதல் 11 மற்றும் 13 சொத்துக்களுக்கு 4ம் பிரதிவாதி கந்தசாமி பெயரில் பட்டா இருந்தது என்றால் சரிதான். பின்னிட்டு 03.03.1989ல் கோவிந்தசாமியிடம் இருந்து 4ம் பிரதிவாதி கந்தசாமி 12வது அயிட்ட சொத்துக்களை ஒரு கிரயம் ஆவணம் வாங்கிகொண்டார் என்றால் சரியல்ல. என்அப்பாவும், கோவிந்தசாமி பாகம்பிரித்து கொண்ட பின்னர் 4ம் பிரதிவாதி சரியான முறையில் கிரயம் வாங்கிகொண்டார் என்றால் சரியல்ல. மேற்படி பத்திரத்தின் நான்கெல்லையை பார்த்தால் பாகப்பிரிவினை விவரம் தெரியும் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் மற்றும் இன்னும் சிலசொத்துக்கள் 4ம் பிரதிவாதி அனுபவம் செய்துகொண்டு வந்ததால் தான் கடந்த 19.09.1994 அன்று அவரது குடும்ப உறுப்பினர்கள் சார்பாக சுந்தராம்பாள் என்பவரிடம் வா.சா.ஆ.2 மூலமாக அடமானம் வைத்தார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தை பார்த்ததால் அதில் கண்டுள்ள

சொத்துக்களை 4ம் பிரதிவாதி அவர் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்துவந்தார் என்று தெளிவாக தெரியவரும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2ல் கண்டுள்ள சிலசொத்துக்களை தாவா சொத்தில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2ல் கண்டுள்ள சேர்க்காத சொத்துக்கள் நான் கேட்டுள்ள பாரிகாரத்திற்கு அவசியமான சொத்துக்கள் என்றும், அந்த சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கததால் Partial Partition தோஷத்தால் எனது வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் வைக்கப்பட்ட ஈடு என்ன ஆனது என்று தெரிந்தகொள்ள ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் அவர்கள் அடமானம் வைக்கவில்லை. வழக்கு சொத்துக்கள் கூட்டு சொத்துக்கள் என்றும், அதை நான் 4ம் பிரதிவாதியுடன் கூட்டாக தான் அனுபவித்து வருகிறேன் என்பதை காட்ட எங்களது பெயரில் உள்ள கூட்டுபட்டா மற்றும் அடங்கல், வருவாய்துறை ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் 4பிரதிவாதியுடன் கூட்டாக அனுபவத்தில் இல்லை என்றும், அதனால் தான் நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பொறுத்து நானும், 4ம் பிரதிவாதியும் கூட்டு அனுபவத்தில் தான் உள்ளோம் என்றும், எனக்கும் அதில் பங்கு உள்ளது என்று கூறி வருவாய்துறை ஆவணங்களில் எனது பெயரை கூட்டாக சேர்க்க மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. நான் கூட்டுஅனுபவத்தில் இல்லைஎன்றும், எனக்கு பங்கு இல்லை என்றால், நான் வருவாய்துறையில் மனு கொடுத்துள்ளேன். நான் வருவாய்துறையில்கொடுத்த மனுவை எங்கள் தரப்பு ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வருவாய்துறையினரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 08.12.2021ல் தாவா சொத்து 6 முதல் 11 அயிட்ட சொத்துக்களை பொறுத்து ஒரு பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் 4ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதி மணிவண்ணன் பெயரில் ஏற்படுத்திகொடுத்துள்ளார் என்றால் சரிதான். கடந்த 27.08.2020ல் 12 மற்றும் 13

அயிட்ட சொத்துக்களை பொறுத்து 2ம் பிரதிவாதி பிரியா பெயரில் ஒரு கிரய பத்திரம் ஏற்படுத்தி விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்திற்கு பிறகும், இந்த கிரய பத்திரத்திற்கு பிறகு அவர்கள் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி 2பத்திரத்தை ரத்து செய்யவேண்டும் என்று இந்த வழக்கில் கேட்கவில்லை என்றால் சரிதான். மேற்படி பத்திரத்திற்கு பின்பு தான் சரியான முறையில் 1, 2ம் பிரதிவாதி பெயரில் மேற்படி சொத்துக்களை பொறுத்து வருவாய்துறை ஆவணம் தனிப்பட்டமுறையில் வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களை 1,2 பிரதிவாதிகள் அவர்கள் தனிப்பட்ட சொத்தாக அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி பத்திர விவரங்களை அவர்கள் எதிர்வழக்குரை மற்றும் கூடுதல்எதிர்வழக்குரையில் சொல்லியதற்கு பிறகு மேற்படி பத்திரங்கள் பற்றிய விவரங்களை தெரிந்து கொள்ள நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுத்தேன். மேற்படி பத்திரங்களை நகல் எடுத்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். மேற்படி விவரம் தெரிந்ததற்கு பிறகும் இந்த வழக்கில் ரத்து செய்யவேண்டும் என்று நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். இந்த சொத்துக்கள் ஏற்கனவே 4ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றும், அதனால் தான் மேற்படி வழக்கில் பத்திரங்களை ரத்து செய்ய எந்த வித நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு 38 வருடம் முன்பு நன்னை கிராமத்தில் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பிறகு நன்னை கிராமத்தில் எனது கணவரோடு தான் வசித்துவருகிறேன். நல்லது, கெட்டது மட்டும் தான் மேலமாத்தூருக்கு வந்துசெல்வேன் என்றால் சரிதான். என் திருமணத்தின்போதே நகைகள் மற்றும் ஆடு, மாடு, சீர்வரிசை கொடுத்து நல்ல முறையில் திருமணம் செய்துவைத்தார் என்றால் சரியல்ல. என்அப்பா உயிரோடு இருக்கும்போதே எனது தந்தை, நான் மற்றும் 4ம் பிரதிவாதி சேர்ந்து ஏற்படுத்திகொண்டே வாய்மொழி அடிப்படையில் எனக்க சேரவேண்டிய பாகத்திற்கு அசையா சொத்து மற்றும் சீர்வரிசை பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. எனது திருமணத்திற்கு பின்னிட்டு

4ம் பிரதிவாதி தான் தாவா சொத்துக்களை அவரது தனிப்பட்ட அனுபவத்தில் வைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்துக்களில் இருந்து வருமானம் மற்றும் விளைச்சல் எதையும் எனக்கு தரவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து அவரது தனிப்பட்ட சொத்து என்றும், அதனால் தான் அவர் வருமானம் மற்றும்விளைச்சலை அவர் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. பி அட்டவணை சொத்திற்கும் எனது குடும்பத்திற்கு எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பி அட்டவணை சொத்திற்கு பட்டா ரவிச்சந்திரன் மகன் தங்கராசு பெயரில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி அட்டவணை சொத்திற்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. பி அட்டவணை சொத்தை இந்த வழக்கில் சேர்த்ததால் தங்கராசையும் இந்த வழக்கில் அவசியமான தரப்பினர் என்றால் சரியல்ல. எனது திருமணத்திற்கு பிறகு தாவா சொத்தில் 4ம் பிரதிவாதியுடன் கூட்டு அனுபவத்தில் இல்லை என்றால் சரிதான். கூட்டுஅனுபவத்தில் இல்லாத சொத்திற்கு கூட்டுஅனுபவத்தில் உள்ளதாக கூறி செலுத்தியுள்ள நீதிமன்றம் கட்டணம் தவறு என்றால் சரியல்ல. தவறான பிரிவில் நீதிமன்றம் கட்டணம் செலுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொய்யான சங்கதிகளை சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து கூட்டுகுடும்ப சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எனது பாகஉரிமை அற்றுபோய்விட்டது என்றால் சரியல்ல. வழக்கு காலவதிதோஷத்தால் பாதிக்கப்பட்டது என்றும், வழக்குமூலம் இல்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த பாகமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை

Sd/-Dr. Sathiyamurthy,
Principal District Judge,
Perambalur.